**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.**

**OS.No.107/2024**

dated : 17.02.2026

P.W.1

Name பேச்சியம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான்நீதிமன்றத்தில் மூத்த கட்டளை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 18 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளேன். வழக்குரை சொத்தின் புல எண். 437/D ஆகும். வழக்குரை சொத்தின் மொத்த அளவு 90 செண்ட் ஆகும். வழக்குரை சொத்து என் தந்தை பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது. மேற்படி விவரம் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கான அரசு வழிகாட்டு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பட்டா என் சகோதரிகள் எழுதி வைத்த ஆவணங்களின் அடிப்படையில் என்னுடைய பங்கை பிரித்து தரும்படி வழக்கு போட்டுள்ளேன். நீதிமன்ற உத்தரவு ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். வழக்குரை சொத்து கூட்டு அனுபவத்தில் இருந்தது. கூட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை காட்டும் வருவாய்துறை ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதியின் கணவர் பெயர் பாண்டியன்.

24.05.2022 ல் அவர் இறந்துபோனார். பாண்டியன் என்பவருடைய வாரிசு சான்று என்வசம் உள்ளது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர் என்னுடன் சேர்த்து 6 நபர்கள். என் தந்தைக்கு பிறந்தவர்களில் மூத்தவர் சரஸ்வதி. 15 ம் பிரதிவாதி மாரியம்மாள் குழந்தையாக இருக்கும்போதே சரஸ்வதியின் கணவர் இறந்தார் என்றால் சரியல்ல. சரஸ்வதி தன் கணவரை இழந்தபின்னர் என் தாயாருடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல அவருக்கு இரண்டாவது திருமணம் நடைபெற்றது. என் தாயார் பெண் மக்கள் அனைவருக்கும் திருமணம் செய்து வைக்கும்போது போதிய சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் 17.07.2002 ம் தேதி சரஸ்வதிக்கு ஆதரவாக உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 17.07.2002 ம் தேதி அவ்வாறு எழுதிக் கொடுத்த உயில் சொத்துக்கள் போக மீதிச் சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் தாயார் இறந்தபின்னர் குடும்பத்தின் மூத்த மகள் என்ற முறையிலும் என் தாயாருடன் வசித்து வந்தவர் என்ற முறையிலும் சொத்துக்களை சரஸ்வதி மட்டும் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளும் 5 ம் பிரதிவாதியின் மனைவியும் சேர்ந்து சமுத்திர செல்வி என்பவருக்கு அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு அதிகார ஆவணம் பெற்ற சமுத்திரகனி என்பவரிடமிருந்து 10 ம் பிரதிவாதி 12.04.2010 தேதியில் வழக்குரை சொத்தின் கிழக்கு பகுதியில் 44 செண்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் கிழக்கு பக்கம் வாங்கியுள்ளார் கீழக்கடைசியில்

வாங்கவில்லை. அதில் 10 ம் பிரதிவாதி வீடு கட்டி வரிவிதிப்பு ஏற்பட்டு வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அதற்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டு 10 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 முதல் 4 மற்றும் 5 ம் பிரதிவாதியின் மனைவியும் சேர்ந்து சமுத்திர செல்விக்கு அதிகார ஆவணம் கொடுக்கும்போதே எனக்கு உரிய பங்கிற்கான தொகையை கொடுத்துவிட்டார்கள் என்று அதை நான் என் தாயாரிடமிருந்து பெற்றுக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு பணம் பெற்றுக் கொள்ளும்போது 1 ம் பிரதிவாதி சரஸ்வதியும் உடனிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை சொத்து சங்கரன்கோவில் கழுகுமலை சாலையில் கிழமேல் சாலையின் தெற்காக அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்குரை சொத்து தற்போது மதிப்பு உயர்ந்துவிட்டதால் ஏற்கனவே எனது பங்கிற்கான தொகையை பெற்றுக் கொண்டு வழக்கு சொத்திலிருந்து உரிமை விடுப்பு செய்து விலகி கொண்ட நிலையில் தற்போது கூடுதலாக பணம் பறிக்கும் நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 16 ஆண்டுகளாக 10 ம் பிரதிவாதி தொடர்ச்சியாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் எனக்கு எந்த பங்கும் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 11 ம் பிரதிவாதி உறவு முறையில் எனக்கு மருமகன் என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி எங்கள் ஊர்க்காரரோ உறவினரோ அல்ல என்றால் சரிதான். 11 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள சொத்திற்கு மேற்கிலுள்ள இடத்தை வேறு நபருக்கு எனது பங்காளிகள்

கிரையம் கொடுக்கும்போது நான் அதை தெரிந்திருந்தும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கு இதுவரை எந்த ஆவணமும் ஏற்படவில்லை. வழக்குரை சொத்தை பொருத்து மட்டும் பாகம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். என் வழக்கு காலவரம்பினால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.17 17:45:41 +0530